றேன்? அடுத்து, அத்திட்டம் நிறைவேற 3 ஆண்டுகள் ஆகும் என்றார்கள். இப்போது வறட்சி காரணமாக மக்கள் குடிநீருக்கு அங்கே மிகவும் அவதிப்படுகின்ற காரணத்தினால், அந்தத் திட்டத்தை மிக விரைவிலே நிறைவேற்றுவதற்கு அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தைக் குறுக்குவதற்கு அரசு முடிந்த அளவில் முயற்சி செய்யும்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தண்ணீரைப் பொறுத்தவரையில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி துறையூரைப் பற்றியது.

திரு. இரெ. இராசமாணிக்கம்: குடிநீர்ப் பிரச்னை இன்றைய தினம் பெரிய பிரச்னையாக இருக்கிறது. குடிநீர் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்ட குழாய்க் கிணறுகள்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படிப்பட்ட பொதுவான கேள்வியை அனுமதிப்பது நன்றாக இருக்காது. கேள்வி துறையூரைப் பற்றியது.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நகரசபை குடிநீர் திட்டத்தின் அடிப்படையிலே 3 ஆண்டுகள் கழித்து தண்ணீர் கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். இதைப்போல, நகரசபையில் ஏற்கனவே போடப்பட்ட எஸ்டிமேட்டுகள் தள்ளுபடி செய்யப்பட்டன என்று சொல்லுகிறார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இக்கேள்வி துறையூரைப் பற்றியது. திரு. இராசமாணிக்கத்திற்கு ஒரு தீர்ப்பு. தங்களுக்கு ஒரு தீர்ப்பு என்று அளிக்க முடியாது. வினா எண். 10.

கோவை இ. எஸ். ஐ. மருத்துவமனை.

வினா எண். 10— திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

1981 ஜனவரி 23]

(அ) கோவை இ. எஸ். ஐ. மருத்துவ மனையில் உள்ள டிஸ்பென்சரிகளிலும் மருத்துவ மனைகளிலும் மருந்து கிடைக்காமல் நோயாளிகள் வெளி (தனியார்) மருத்துவ மனைகளுக்கு சிகிச்சைக்காக செல்வது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், மருந்துகள் முறையாக கிடைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) அரசிற்கு அவ்வாறு தகவல்கள் ஏதும் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை ஈ.எஸ்.ஐ. மருத்துவமனையில் முறையான சிகிச்சை அளிக்கப்படாத காரணத்தினால், வெளியே தனியார் மருத்துவ மனைகளிலே சிகிச்சை பெறுகின்ற நிலை இருக்கின்றது. நான் இதே சட்டமன்றத்திலே இதைப்பற்றி மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடம் மனுக் கொடுத்திருக்கிறேன். எனவே, புகார் இல்லை என்று சொல்வது சரியல்ல. மேலும் ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனையைப் பொறுத்தவரையில், அங்கே வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களுக்கு எந்தவிதமான மருத்துவ வசதியும் இடையாது. ; நல்லமுறையிலும் சிகிச்சை அளிக்கப்படுவதில்லை. அதன் காரணத்தினால், தொழிலாளர்கள் வெளியே தனியார் மருத்துவ மனைகளுக்குச் சென்று தங்கள் பணத்தைச் செலவழிக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். கோவை ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனையிலே, நடைமுறையிலே மோசடி நடக்கிறது என்று சொல்லலாம். அங்கே இருக்கக்கூடிய டாக்டர் மருந்துகளை எடுத்துச் சென்று, தனியார் கடைகளிலே விற்கின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், இதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி இன்ஷூர்டு பர்சன்சைப் பொறுத்தது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே பணி செய்யும் தொழிலாளர்களைப் பற்றிப் பேசினார்கள். கேள்வி எது என்று தெளிவாகச் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன். நல்வாழ்வுத் துறை அமைச்சரிடத்தில் மனுவைக் கொடுத்து விட்டு கேள்வியை எனக்கு போட்டிருக்கிறீர்கள். மனுவையும் என்னிடத்தில் கொடுத்திருக்கலாம்.

திரு. கு. ரமணி: கோவை இ.எஸ்.ஐ. மருத்துவ மனை பெரிய மருத்துவ மனை. அந்த மாவட்டத்தில் இருக்கும் அனைத்து இன்ஷூர்டு பர்சன்சுக்கும் இருக்கும்படியான மருத்துவ மனை. அங்கு சரியானபடி சிகிச்சை கிடைப்பதில்லை. டாக்டர்கள் கவனிப்பு குறைவாக இருக்கிறது. மருந்து கிடைப்பதில்லை. அதனால் கஷ்டப்பட்டு வெளி மருத்துவ மனைக்குப் போவது உண்மைதான். அமைச்சர் அவர்கள் முன்பு திடீரென்று விஜயம் செய்து பார்த்தது போல் இப்போதும் செய்து அங்கு வந்து விசாரித்து பார்த்தால் இந்த விவரங்களை நிருபிக்க முடியும். அமைச்சர் அவர்கள் அதற்கு உத்தரவாதம் அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : முன்பு திடீரென்று பரிசோதனை செய்தது உண்மை. அடிக்கடி திடீர் பரிசோதனை செய்தால் —It loses its cha m அதிலே கவர்ச்சி இல்லாமல் போய்விடும். தேவையான மருந்துகள் எல்லாம் வாங்கி வைக்கப்பட்டிருக்கின்றன. அது இல்லையென்று சொன்னால் மருந்தை எழுதிக் கொடுத்து வாங்கிக் கொண்டு வந்தால் அந்தத் தொகை ரி-இம்பர்ஸ்மெண்ட் செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யாராவது ஒரு தொழிலாளரிடமிருந்தாவது புகாரை வாங்கிக் கொடுத்தால் இன்வெஸ்டிகேஷன் செய்ய உதவியாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதன் காரணமாக மீண்டும் ஒரு முறை சர்ப்ரைஸ் செக் செய்கிறேன் என்று உறுதி கூறுகிறேன்.

திரு. எம். ஆறுமுகம் : இ.எஸ்.ஐ. மருத்துவ மனையில் காச நோய்ப் பிரிவு இல்லாத காரணத்தால் தனியார் மருத்துவ மனைகளுக்குச் செல்லும் நிலைமை இருக்கிறது. அங்கு காச நோய்ப் பிரிவு ஏற்படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பல்வேறு பெரிய மருத்துவ மனைகளிலுள்ள காச நோய் பிரிவில் இ.எஸ். ஐ. தொழிலாளர்களுக்காக பெட் ரிசர்வ் செய்யப்படுகிறது. வேறு சில இடங்களில் தனியாகக் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகிறது. மேலும் வெளியார் நிதியிலிருந்து கட்டிடங்கள் கட்டித் தருவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தப் பகுதிக்குத் தேவை என்று சொன்னால் அதையும் அரசு பரிசீலனை செய்யும்.

திருத்துறைப்பூண்டிக்கு குடிநீர் வழங்கல்.

*வினா எண். 11—திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :